# செய்திமடல்

தொகுதி - 04 இல - 02, 03
மாசி, பங்குனி 2025

## ராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு



பட்டாணி கடலை ஒன்று சாணக் குழியில் விழுந்து முளைத்தாலும் பட்டாணியின் இயல்பை அது இழந்து விடுவதில்லை. அதுபோல் சான்றோர் விதி வசமாய் கீழ்குடியில் பிறந்தாலும் அவர்களது மேலான இயல்பு அழிந்து விடுவதில்லை.

**- பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்**

## கொட்டகலை ராமகிருஷ்ண மிஷன் சிவானந்த நலன்புரி நிலைய மஹா கும்பாபிஷேக விழா

கொட்டகலை ராமகிருஷ்ண மிஷன் சிவானந்த நலன்புரி நிலைய மஹா கும்பாபிஷேக விழா மற்றும் நலன்புரி நிலைய திறப்பு விழாவை முன்னிட்டு 07 பெப்ரவரி 2025 வெள்ளிக்கிழமை அன்று நிகழ்வுகளின் தொடக்கமான யாகசாலை கிரியா நிகழ்வுகள் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து பஜனை, திருவாசகம் முற்றோதல், பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் வாசித்தல் , ராம நாம சங்கீர்த்தனம் , ஸ்ரீ தேவி மஹாத்மியம் பாராயணம் போன்ற நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று 10.02.2025 திங்கட்கிழமை அன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்நிகழ்வில் உலகளாவிய ராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் துணைத் தலைவர் அதி வணக்கத்திற்குரிய ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்தஜி மஹராஜ் அவர்கள் மற்றும் பல துறவிகள் கலந்து சிறப்பித்தார்கள்.



# கொட்டகலை ராமகிருஷ்ண மிஷன் சிவானந்த நலன்புரி நிலைய மஹா கும்பாபிஷேக விழா

## கொட்டகலை ராமகிருஷ்ண மிஷன் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மாபெரும் ஊர்வலம்!









கொட்டகலை ராமகிருஷ்ண மிஷன் சிவானந்த நலன்புரி நிலையத்தின் மஹா கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு, 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரை மாபெரும் ஊர்வலப் பவனி நடத்தப்பட்டது. இந்த பவனி, கொட்டகலை பிரதேச சபை அருகிலிருந்து ஆரம்பித்து ஹரிங்டன் ராமகிருஷ்ண மிஷன் வரை நடைபெற்றது. இதில் 2500-க்கும் மேற்பட்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர்.

ஊர்வலப் பவனியில் கலந்துகொண்ட மக்களுக்கு இடையில், கிராம மக்கள் மற்றும் ஆலய நிருவாக சபைகளால் தாக சாந்தி மையங்கள் அமைக்கப்பட்டு, அனைவருக்கும் நீர் மற்றும் பானங்கள் வழங்கப்பட்டன.இந்த நிகழ்வு, பக்தி மற்றும் சமூக ஒற்றுமையின் ஒரு முக்கியமான வெளிப்பாடாக அமைந்தது.











# கொட்டகல சிவானந்த நலன்புரி நிலையம் கும்பாபிஷேக விழா

## கொட்டகலை ராமகிருஷ்ண மிஷன் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இடம்பெற்ற பொது நிகழ்வு










ராமகிருஷ்ண மிஷன் சிவானந்த நலன்புரி நிலையத்தின் மஹா கும்பாபிஷேகத்தை ஒட்டி, 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை சிறப்பு பொது நிகழ்வு ஒன்றும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீமத் சுவாமி ராஜேஸ்வரானந்தஜி மஹராஜ் (ராமகிருஷ்ண மிஷன், கொழும்பு) அவர்கள் கலந்து கொண்டு விழாவிற்கு ஆன்மிக வளத்தை ஏற்படுத்தினார். நிகழ்வின் தொடக்கத்தில் ராமகிருஷ்ண மிஷன் மாணவர்கள் பஜனை நிகழ்த்தினர். பின்னர் தேஜஸ்வராலயா கலைக்கூடம், கொழும்பு சார்பில் திருமுறை சமர்ப்பணம் வழங்கப்பட்டது.

ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜி மஹராஜ் (பொது முகாமையாளர், ராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு) அவர்கள் வரவேற்புரையினை வழங்கினார். அதனைத் தொடர்ந்து பிரம்மச்சாரி கார்த்திக் சைத்தன்யா அவர்கள் “சுவாமி விவேகானந்தர் காட்டும் ஒப்பற்ற பாதை” என்ற தலைப்பில் உரையாற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து நவரச திருத்ய நர்த்தனாலயா மாணவிகளின் நடன நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. பின்னர், ஸ்ரீமத் சுவாமி நித்யதீபானந்தஜி மஹராஜ் (தலைவர், ராமகிருமடம், மதுரை – இந்தியா) தலைமையுரை ஆற்றினார்.கலாபூஷணம் சதகம் சரவணபவன் அவர்கள் நிகழ்வின் முக்கிய அம்சங்களை தொட்டுப் பேசியதோடு, நிகழ்ச்சிக்கான நற்பயணத்தை எடுத்துரைத்தார். இறுதியாக, நிகழ்ச்சியில் பங்கேற்ற நடனக் குழுவினருக்கான பரிசளிப்பு நடைபெற்றது. திரு. S. ராமச்சந்திரன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.






# கொட்டகல சிவானந்த நலன்புரி நிலையம் கும்பாபிஷேக விழா

## மஹா கும்பாபிஷேக விழாவின் மறுநாள் சிறப்பு மேடை நிகழ்வு









நிகழ்ச்சி இலங்கை தேவார பண்ணிசை வளர்ச்சிக் கழகம் வழங்கிய பண்ணிசை நிகழ்ச்சியுடன் தொடங்கியது. பின்னர், சுவாமி மாத்ருசேவானந்தஜி மஹராஜ்(திருவண்ணாமலை இந்தியா) அவர்களும், திரு. இரா. ஸ்ரீஸ்கந்தராஜா குழுவினரும் ஆன்மிக பஜனை நிகழ்த்தினார்கள்.

கொட்டகலை தமிழ் வித்தியாலய மாணவிகள் வழங்கிய வரவேற்பு நடனம்பார்வையாளர்களை கவர்ந்தது. வரவேற்புரையை ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜி மஹராஜ் (பொதுமுகாமையாளர், ராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு) அவர்கள் ஆற்றினார்.பின்னர் நிகழ்வின் முக்கிய அம்சமாக, ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜி மஹராஜ் (தலைவர், ராமகிருஷ்ண மிஷன், இலங்கை) அவர்கள் தலைமையுரை ஆற்றினார். வாழ்த்துரை வழங்கஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தஜி மஹராஜ் (ராமகிருஷ்ண மடம், காசி, இந்தியா) மற்றும் திரு. ராமசாமி ரெட்டியார் விஜயபாலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கும்பாபிஷேக மலர், புத்தகம், கலண்டர் மற்றும் பொன்மொழிகள் கையேடு ஆகியவைவிழாவில் வெளியிடப்பட்டன. சிறப்பாக பங்கேற்றோர் அனைவருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.நிகழ்ச்சியின் நிறைவுஅணியைஉலகளாவிய ராமகிருஷ்ண மடங்கள் மற்றும் மிஷன்களின் துணைத் தலைவர், அதி. வண. ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்தஜி மஹராஜ் அவர்கள் ஆற்றியஆசியுரை தழுவியது. நிகழ்வின் இறுதிப் பகுதிஆன்மிகஆனந்தம் நிறைந்த ஹோமம், மஹா தீபாராதனை, அன்ன நைவேத்யம் மற்றும் அன்னபிரசாதம் வழங்கல் ஆகியவைஆன்மிகஅசைவினைக் கொண்டு சிறப்பாக நடந்தன.
















# கொட்டகல சிவானந்த நலன்புரி நிலையம் கும்பாபிஷேக விழா

## கும்பாபிஷேக விழா ஆயத்த நிகழ்வுகள்

ராமகிருஷ்ண மிஷன் சிவானந்த நலன்புரி நிலையத்தின் மஹா கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு, 01 பிப்ரவரி 2025 முதல் 08 பிப்ரவரி 2025 வரை பல்வேறு ஆயத்த நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்வுகள் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜி மஹராஜ் மற்றும் ஸ்ரீமத் சுவாமி உமாதீஷானந்தஜி மஹராஜ் ஆகியோரின் தலைமையில், இல்ல மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பக்தர்கள் ஆகியோரின் உற்சாக பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றன.

மடத்தின் முழு வளாகம்—including யாகசாலை, கோயில்கள், வாசஸ்தலங்கள் மற்றும் பொதுமுனைகள்—தூய்மையாக பராமரிக்கப்பட்டது. குப்பை அகற்றுதல், செடி வெட்டுதல், பாதைகளில் தூசி நீக்குதல் உள்ளிட்ட பணிகள் முழு தீவிரத்தில் நடைபெற்றன. பக்தர்கள் மற்றும் விருந்தினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட தங்குமிடங்கள் சீராக ஒழுங்கமைக்கப்பட்டன. படுக்கைகள், கட்டிடங்கள், சன்னியாசிகள் தங்கும் அறைகள் அனைத்தும் தூய்மையும் வசதிகளும் மிக்கவையாக தயார் செய்யப்பட்டன.

அருந்தவ நிகழ்வுகளில் உணவு மிக முக்கியமான பகுதியாக இருக்க, பிரசாதப் பிரசரணம், பக்தர்களுக்கான நாள் உணவுகள் ஆகியவை எல்லாம் சீராக நடந்தன. விழாவிற்குமுன் கிராம மக்களின் நம்பிக்கையை ஒட்டியவாறாக காவல் தெய்வங்கள் மற்றும் கிராமிய தெய்வங்களுக்கு பூஜைகள் நடத்தப்பட்டன. இது நிலையான காப்பு, நலன், விழா வெற்றி ஆகியவற்றுக்கு அடித்தளமாக அமைந்தது. யாகசாலை மிகவும் அழகாக பூமாலை, தோரணம் மற்றும் விளக்கொளிகளால் அலங்கரிக்கப்பட்டது. கோயில் அலங்காரம், புஷ்பச் சித்திரங்கள், கொடி அலங்காரங்கள் என விழாவிற்கு தேவையான ஆன்மிகத் துலக்கத்தைக் கொண்டுவந்தன.

இந்த அனைத்து நடவடிக்கைகளும் ஒருமித்த பண் பும், அர்ப்பணிப்பும் நிறைந்த பக்தர்கள், மாணவர்கள் மற்றும் தொண்டர்களால் சீராகவும் ஆனந்தமாகவும் நடைபெற்றன. விழாவின் வெற்றிக்கான நிதானமான அடித்தள வேலைகளாக இவை அமைந்தன.









# நூற்றாண்டு தொடக்க விழா

## வரவேற்பு

உலகளாவிய ராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் துணைத் தலைவர் அதிவணக்கத்திற்குரிய ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்தஜி மஹராஜ் அவர்கள் 14.02.2025 அன்று மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனிற்கு வருகைதந்தார். கல்லடி மணிக்கூண்டு கோபுரச் சந்தியிலிருந்து ராமகிருஷ்ண மிஷன் ஆசிரமம் வரை சுவாமிஜி அவர்களை வரவேற்க மாணவ, மாணவிகள், பழைய மாணவர்கள், பக்தர்கள், சமயப் பாடசாலை ஆசிரியர்கள், ராமகிருஷ்ண மிஷன் ஆசிரம பணியாளர்கள் மற்றும் தொண்டர்கள் ஆகியோர் பெரும்விசையாக வரவேற்பு அளித்தனர்.



## மந்திர தீட்சைப் பெருவிழா

15.02.2025 அன்று மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனில் நடைபெற்ற மந்திர தீட்சை விழாவில், அதிவணக்கத்திற்குரிய ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்தஜி மஹராஜ் அவர்கள் பக்தர்களுக்கு மந்திர தீட்சை வழங்கி அவர்கள் ஆன்மிக வாழ்க்கையில் புதிய ஒளிப்பாதையைத் திறந்தார்.



இந்த மந்திர தீட்சை நிகழ்வு, தீட்சை பெற்ற ஒவ்வொருவரின் ஆன்மிக வாழ்க்கையில் ஒரு நினைவெண்ணாகவும், மேன்மைமிகு தொடக்கமாகவும் அமைந்தது.

## அதிவணக்கத்திற்குரிய ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்தஜி மஹராஜ் அவர்களின் சாரதா இல்லத்திற்கான விஜயம்

15.02.2025 அன்று, உலகளாவிய ராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் துணைத் தலைவர், அதிவணக்கத்திற்குரிய ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்தஜி மஹராஜ் அவர்கள் சாரதா மகளீர் இல்லத்திற்கு விஜயம் செய்தார்கள். அங்கு, முதலில் அன்னை ஸ்ரீ சாரதா தேவியாரை தரிசித்த சுவாமிஜி, பின்னர் இல்லத்தில் தங்கி கல்வி பயிலும் சிறார்களிற்கு ஆசீர்வாதம் வழங்கினார்.











# நூற்றாண்டு தொடக்க விழா

# மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனில் சிறப்பு மேடை நிகழ்வு

*(16.02.2025 - விபுலானந்தா ஞாபகார்த்த மணி மண்டபம்)*

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் ஏற்பாடு செய்த சிறப்பு மேடை நிகழ்வு 16.02.2025 அன்று விமர்சையாக நடைபெற்றது. திரு. A. கல்யாண்ஷரன் குழுவினர் பஜனை நிகழ்த்த, மாணவர்கள் வரவேற்பு நடனம் வழங்கினர். கலார்ப்பணா நாட்டிய நிலைய மாணவிகள் நாட்டிய நிகழ்ச்சி வழங்கினர். வரவேற்புரை ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜி மஹராஜ் அவர்கள் ஆற்றினார். தலைமையுரை ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜி மஹராஜ் வழங்க, வாழ்த்துரை ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தஜி மஹராஜ் வழங்கினார். புத்தகங்கள் வெளியிடப்பட்டு, திருமதி பாரதி கென்னடி அவர்கள் அறிமுக உரை நிகழ்த்தினார்.அதிவணக்கத்திற்குரிய ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்தஜி மஹராஜ் அவர்கள் ஆசியுரை வழங்கினார். நன்றியுரை திரு. கணபதிப்பிள்ளை மதிவண்ணன் அவர்கள் வழங்க, நிகழ்வு பிரசாதம் வழங்கலுடன் இனிதே நிறைவுற்றது.



# நூற்றாண்டு தொடக்க விழா

## அதிவணக்கத்திற்குரிய ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்தஜி மஹராஜ் அவர்களின் காரைதீவு விஜயம் மற்றும் சாரதாபவன் திறப்பு விழா


















அதிவணக்கத்திற்குரிய ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்தஜி மஹராஜ் அவர்கள், 17.02.2025 அன்று காரைதீவிற்கு விஜயம் செய்தார்கள். அங்கு அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மனை தரிசித்தார்கள், பின்னர் அங்கிருந்து விபுலானந்த மணி மண்டபம் சென்று பின் காரைதீவு ராமகிருஷ்ண மிஷன் சாரதா நலன்புரி நிலையம் வரை ஊர்வலம் சிறப்பாக இடம்பெற்றது. ஊர்வலத்தைத் தொடர்ந்து, காரைதீவு ராமகிருஷ்ண மிஷனில் அமைந்துள்ள புதிய சாரதாபவனின் திறப்பு விழா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, சுவாமிஜி அவர்கள் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் ஆசீர்வாதம் வழங்கினார். பின்னர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டு நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.

# குருமகராஜ் ஜெயந்தி விழா

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்னரின் 190வது ஜெயந்தி தின விழா 01.03.2025 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு சிறப்பு பூஜை ஹோமம் மற்றும் ஆரத்தி நடைபெற்றன. மாணவர்கள், பக்தர்கள் மற்றும் இசை கலைஞர்கள் பக்தி பாடல்களை பாடினார்கள். விழாவில் 600க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர்.



பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் 190 வது ஜெயந்தி தின விழாவை முன்னிட்டு 28.02.2025 அன்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருவுருவம் தாங்கிய ரதம் மட்டக்களப்பு கல்லடி-உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர், பேச்சியம்மன் ஆலயத்தில் இருந்து ஆரம்பித்து நொச்சிமுனை கிராம மக்களிற்கு ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது. கிராம மக்கள் பகவானை நிறைகுடம் வைத்து வரவேற்றதுடன் ஊர்வலத்தில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு தாகசாந்தியும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.











# மகா சிவராத்திரி பூஜை





26.02.2025 புதன்கிழமை அன்று மகா சிவராத்திரி விழா இரவு 08.30 மணிக்கு தொடங்கி, நான்கு ஜாம பூஜைகள், பஜனை பாடல்கள் மற்றும் சிவநடனம் உள்ளிட்ட ஆன்மிக நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பூஜைகள் அனைத்தும் சுவாமி நீலமாதவானந்தஜி மஹராஜ் அவர்களால் பக்தி பூர்வமாக நடத்தப்பட்டன. 350க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு, தங்கள் திருக்கரங்களினால் பால், தயிர், நெய் மற்றும் தேன் போன்ற அபிஷேகப் பொருட்களால், சுவாமி விபுலானந்தரால் கைலாயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து வழிபட்டனர். பூஜைகள் நிறைவில் அனைத்து பக்தர்களுக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.








# ஐக்கிய வணக்கம்/பூரணை தினம்





13.03.2025 அன்று எமது ராமகிருஷ்ண மிஷனில் பூரணை தின நிகழ்வுகள் ஆன்மிக உணர்வோடும் மகிழ்ச்சியோடும் சிறப்பாக அனுசரிக்கப்பட்டன. நிகழ்வின் போது இல்ல மாணவர்கள் பக்திபூர்வமான பஜனை மற்றும் ஆரத்தி நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து இல்ல மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் ராமகிருஷ்ண மிஷன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெற்று, பங்கேற்பாளர்களின் பாராட்டைப் பெற்றன. நிகழ்வின் ஒரு அம்சமாக, சுவாமி உமாதீஷானந்தஜி அவர்களின் ஆன்மிக உரை இடம்பெற்றது. மேலும் திருமதி. சக்தி அருட்ஜோதி அவர்கள் உரையாற்றினார்கள். இந்நிகழ்வில் சுமார் 350 பேர் — பெற்றோர்கள், பக்தர்கள் மற்றும் குருகுலத்தின் பழைய மாணவர்கள் — கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



















## ஜபயக்ஞம்



2025 ஆம் ஆண்டு பெப்ரவரி 15, மார்ச் 15 ஆகிய நாட்களில் தீட்சை பெற்றுக் கொண்ட பக்தர்களுக்கான மாதாந்த ஜப யக்ஞம் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வு, பக்தர்களின் ஆன்மிக மேம்பாட்டை ஊக்குவிப்பதற்கான ஒரு முக்கிய நிகழ்வாகும்.

## விஞ்ஞான ஆய்வுகூட பயிற்சி வகுப்புகள்

எமது விஞ்ஞான ஆய்வு கூடத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் பயிற்சி வகுப்புகள் இடம் பெறுவது வழமை. தை மாதத்திலும் இவ்வாறான பயிற்சி வகுப்புகள் இடம்பெற்றன.











## ஜீவனானந்த சமூக சேவைத்திட்டம் - கிராமங்களில் அறநெறிப் பாடசாலை

### வாகரை, ஈரளக்குளம், குடும்பிமலை, கோரகல்லிமடு கிரான் விவேகானந்தா நலன்புரி நிலையத்தில் அறநெறிப்பாடசாலை வகுப்புகள்



பெப்ரவரி மற்றும் மார்ச் 2025 இல் கொக்குவில் அறநெறிப் பாடசாலையில் 20 மாணவர்களும் மதுரங்கேணிக்குளம் அறநெறிப் பாடசாலையில் 25 மாணவர்கள் ஈரளக்குளம் அறநெறிப் பாடசாலையில் 20 மாணவர்களும் குடும்பிமலை அறநெறிப் பாடசாலையில் 24 மாணவர்களும் கிரான் விவேகானந்தா நலன்புரி நிலையத்தில் 40 மாணவர்களும் வருகை தருகின்றனர்.

# ஜீவனானந்த சமூக சேவைத்திட்டம்

## வாகரை, குடும்பிமலை, கோரகல்லிமடு கிரான் விவேகானந்தா நலன்புரி நிலையத்தில் மருத்துவமுகாம்கள்





பெப்ரவரி மற்றும் மார்ச் 2025 இல் கொக்குவில், கிரிமிச்சோடை மற்றும் மதுரங்கேணிக்குளம் ஆகிய இடங்களில் நடைபெற்ற எங்களுடைய மருத்துவ முகாம்களில் 72 நோயாளிகளும் மட்டப்புல் தோட்டம், பெரியவட்டவான் மற்றும் குடும்பிமலை ஆகிய இடங்களில் நடைபெற்ற எங்களுடைய மருத்துவ முகாம்களில் 67 நோயாளிகளும் கிரான் விவேகானந்தா நலன்புரி நிலையத்தில் 1322 நோயாளிகளும் பயனடைந்தனர்.

## காரைதீவு சாரதா நலன்புரி நிலையம் மருத்துவமுகாம் மற்றும் சத்சங்கம்




காரைதீவில் உள்ள சாரதா நலன்புரி நிலையத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மருத்துவ சேவை இடம்பெறுவது வளமை. பெப்ரவரி மற்றும் மார்ச் 2025 இல் நடைபெற்ற எங்களுடைய மருத்துவ சேவையில் 84 நோயாளிகள் பயனடைந்தனர். இங்கு ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும் சத்சங்கம் இடம்பெறுகின்றது.

# மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பற்றிய செய்திக் குறிப்புகள்

உள்நாடு 9 வெள்ளிக்கிழமை 24/01/2025



## சுவாமி விவேகானந்தரின் 163 ஆவது ஜனன தினம்!

(வி.ரி.சகாதேவராஜா)

ஸ்ரீ இராமகிருஸ்ண மிசனை ஸ்தாபித்த வீரத்துறவி சுவாமி விவேகானந்தரது 163 ஆவது ஜனன தின விழா மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஆச்சிரமத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் ஜெயந்தி விழா கொடியேற்றத்துடன் நடைபெற்றது.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆலயத்தில் இடம்பெற்ற ஜெயந்தி விழாவில் அதிகாலை 5 மணியளவில் மங்கள ஆரத்தி சுப்ரபாதம் என்று ஆரம்பித்து ஆலய வலம், ஹோமம், பஜனை, சொற்பொழிவுடன் சுவாமி விவேகானந்தர் பஜனை பாடல்கள் இசைக்கப்பட்டன.

## மலையகத்தில் முதன்முறையாக இ.கி.மிஷன் கிளை கொட்டகலையில்

### 10 ஆம் திகதி இராமகிருஷ்ண ஆலய மகா கும்பாபிஷேகம்; சிவானந்தா நலன்புரி நிலையமும் திறந்து வைக்கப்படும்

(காரைதீவு நிருபர்)

இலங்கை இராமகிருஷ்ண மிஷன், மலையகத்துக்கான முதலாவது கிளையை நுவரெலியா மாவட்டத்தில் உள்ள கொட்டகலையில் அமைத்திருக்கின்றது. வரலாற்றில் முதல் தடவையாக மலையகத்தில் பகவான் இராமகிருஷ்ண ஆலயமும், சிவானந்த நலன்புரி நிலையமும் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட இருக்கின்றன. பகவான் இராமகிருஷ்ண திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற இருக்கின்றது. அத்துடன் மலையகத்துக்கான சிவானந்தா நலன்புரி நிலையமும் திறந்து வைக்கப்பட இருக்கிறது.

இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ தலைமையில் நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன. மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் சகல ஏற்பாடுகளையும் கவனித்து வரவேற்புரை நிகழ்த்தவிருக்கிறார்.

பிரதம அதிதியாக உலகளாவிய இராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடங்களின் துணைத்தலைவர் ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்த ஜி மகராஜ் கலந்து சிறப்பிக்க இலங்கை வருகிறார். இந்தியா காசி இராமகிருஷ்ண மடத் தலைவர் சுவாமி சர்வரூபானந்த ஜி மகாராஜும் மதுரை இராமகிருஷ்ண மடத் தலைவர் சுவாமி நித்யதீபானந்த ஜீ மகாராஜும் வருகை தர இருக்கிறார்கள்.

கும்பாபிஷேக கிரியைகளை சிவாகம கலாநிதி சிவஸ்ரீ கு வைக வைத்தீஸ்வர குருக்கள் நடத்தி வைக்க இருக்கின்றார்.

முன்னதாக 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொட்டகலை பிரதேசத்தில் மாபெரும் ஊர்வலம் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி இராஜேஸ்வரானந்தா ஜீ மகராஜ் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

வீரகேசரி
THE PREMIER NATIONAL TAMIL DAILY IN SRI LANKA
VIRAKESARI
www.virakesari.lk
11.02.2025

## இராமகிருஷ்ண மிஷனின் கிளை கொட்டகலையில் திறப்பு



நமது நிருபர்

இலங்கை இராமகிருஷ்ண மிஷனின் மலையகத்துக்கான முதலாவது கிளை நுவரெலியா கொட்டகலையில் நேற்று(10) திறந்து வைக்கப்பட்டது.

வரலாற்றில் முதல் தடவையாக மலையகத்தில் பகவான் இராமகிருஷ்ண ஆலயமும், சிவானந்த நலன்புரி நிலைய

உள்நாடு 11 திங்கட்கிழமை 10/02/2025



## இராமகிருஷ்ண மிஷன் கிளையின் திறப்பு விழா இன்று கொட்டகலையில்!

(வி.ரி.சகாதேவராஜா)



## கொட்டகலையில் மகா யாகம்

வி.ரி.சகாதேவராஜா

நுவரெலியா மாவட்டம் கொட்டகலையில் இராமகிருஷ்ண ஆலய மகா கும்பாபிஷேகம் மற்றும் சிவானந்தா நலன்புரி நிலையம் திறப்பு விழாவை முன்னிட்டு திங்கட்கிழமை (10) காலை மகா யாகம் நடைபெற்றுள்ளது.

இ.கி.மிஷன் சுவாமிகள் அதை நிறைவேற்றி வைத்துள்ளதுடன்,

சுவாமிகள் மற்றும் ஏனைய பஜனைக் குழுவினரது பஜனைகளும் இதன்போது நடைபெற்றுள்ளது.





## இராமகிருஷ்ண மிஷன் நூற்றாண்டு விழா ஆரம்ப நிகழ்வு



காரைதீவு நிருபர்

இராமகிருஷ்ண மிஷன் நூற்றாண்டு தொடக்க விழா நிகழ்வு உலகளாவிய இராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடங்களின் உப தலைவர் வண. சுவாமி சுஹிதானந்தஜி மகராஜ் முன்னிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கல்லடி சுவாமி விபுலானந்தர் மணி மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கையில் இராமகிருஷ்ண மிஷனை வியாபித்த முதல் இ.கி.மி. துறவி, உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் சமாதியையும் சுவாமிகள் இதன்போது தரிசித்தார்.

உள்நாடு 12 செவ்வாய்க்கிழமை 18/02/2025



## உலக இராம கிருஷ்ணமிஷன் உபதலைவருக்கு காரைதீவில் பூரண கும்பங்களுடன் வரவேற்பு!

(வி.ரி. சகாதேவராஜா)




## உலக இ.கி.மி. துணைத்தலைவர் நாளை காரைதீவுக்கு விஜயம்

(காரைதீவு நிருபர்)

உலக இராமகிருஷ்ண மடம் மற்றும் இராமகிருஷ்ண மிஷன் துணைத்தலைவர் ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்த ஜி மஹராஜ் நாளை திங்கட்கிழமை மாலை காரைதீவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கையில் இராமகிருஷ்ண மிஷனை வியாபித்த முதல் இ.கி.மி. துறவி, உலகின் முதல் தமிழ் பேராசிரியர், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த காரைதீவில், அவருக்கு பாரியளவில் வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அம்மன் ஆலயம், விபுலானந்த மணி மண்டபம் ஆகியவற்றை தரிசித்த பின்னர், ஊர்வலமாக காரைதீவு இ.கி.மி. சாரதா நலன்புரி நிலையத்திற்கு அழைத்துவரப்படுவார்.



அங்கு அமைக்கப்பட்டுள்ள "சாரதா பவன்" சுவாமியால் திறந்து வைக்கப்படவிருக்கிறது என்று இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் தெரிவித்தார்.



# விவேகானந்த மனிதவள மேம்பாட்டு நிலையம்

## ராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு

நமது மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனில் உள்ள விவேகானந்த மனிதவள மேம்பாட்டு நிலையத்தில் பின்வரும் சான்றிதழ் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இவ் வகுப்புகள் சிறந்த வல்லுனர்களால் பயிற்றுவிக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்க - 0750922595



**சிங்களம்**

சனி மாலை 4-6
ஞாயிறு மாலை 4-6

**ஆங்கிலம்**

சனி காலை 8-10
ஞாயிறு காலை 8-10

**கணினி/ஆபீஸ் 365**

சனி காலை 10-12
ஞாயிறு காலை 10-12

**வயலின்**

சனி காலை 8-10
ஞாயிறு மாலை 4-6

**மிருதங்கம்**

செவ்வாய் மாலை 4-6
வியாழன் மாலை 4-6

**கர்நாடக சங்கீதம்**

புதன் மாலை 4-6
வெள்ளி மாலை 4-6

**பண்ணிசை**

சனி காலை 8-10
ஞாயிறு காலை 8-10

**பரதநாட்டியம்**

வெள்ளி மாலை 4-6
ஞாயிறு மாலை 5-6

**சித்திரம்**

வெள்ளி மாலை 4-6
சனி மாலை 4-6

**யோகா**

சனி காலை 6:30-8 a.m.
ஞாயிறு காலை 6:30-8 a.m.

**கராத்தே**

சனி மாலை 4:30-6
ஞாயிறு மாலை 4:30-6

# இல்ல மாணவர்களுக்கு உணவு நன்கொடை விபரம்

"உணவு பரம்பொருளாகும்" - தைத்திரீய உபநிடதம்

**காலை உணவு & பால் தேநீர்**

குழந்தைகளுக்கு ஒரு தினத்திற்கு தேவைப்படும் தொகை: ***16,500/-***

**மதிய உணவு**

குழந்தைகளுக்கு ஒரு தினத்திற்கு தேவைப்படும் தொகை: ***27,500/-***

**இரவு உணவு**

குழந்தைகளுக்கு ஒரு தினத்திற்கு தேவைப்படும் தொகை: ***16,500/-***

**ஒரு நாள் முழுவதற்குமான உணவு(மாலை சிற்றுண்டி தேநீர் உள்ளடங்கலாக)**

குழந்தைகளுக்கு ஒரு தினத்திற்கு தேவைப்படும் தொகை: ***74,800/-***

**சிறப்பு மதிய உணவு**

குழந்தைகளுக்கு ஒரு தினத்திற்கு தேவைப்படும் தொகை: ***44,000/-***

**போயா தினத்திற்கான உணவு**

300 நபர்களிற்கு தேவைப்படும் தொகை :

***1,00,000/-***

**நன்கொடை விபரம்**

நன்கொடை அளிப்பதற்குத் தொடர்பு கொள்ளவும் :

batticaloa@rkmm.org

+94 65 222 2752

'Ramakrishna Mission, Batticaloa'

கணக்கு எண் : 2698511

வங்கி: Bank of Ceylon, Batticaloa Branch

Swift Code: BCEYLKLX

Branch Id: 012

முகவரி: Covington Road, Batticaloa 30000, Sri Lanka

## குணத்தின் மீது செயலின் விளைவு

தொடர்ச்சி............

புத்தருக்கும் ஏசுவிற்கும் இருந்தது போன்ற மாபெரும் சுயேச்சைஒரே பிறவியில் கிடைத்து விடுவதில்லை. இவர்களின் தந்தையர் யார் என்பது நமக்குத்தெரியும். இந்தத் தந்தையர் மனிதகுலத்தின் நன்மைக்காக ஒரு வார்த்தையாவது பேசினார்களா என்பது சந்தேகமே! ஜோசப்பைப் போன்று லட்சக்கணக்கான தச்சர்கள் வந்து போய் விட்டனர். லட்சக்கணக்கானோர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். புத்தரின் தந்தையைப் போன்ற எண்ணற்ற சிற்றரசர்கள் உலகம் முழுவதும் இருந்திருக்கின்றனர். பரம்பரையின் காரணமாக குணம் அமையும் என்றால், ஒருவேளை தன் சொந்த ஏவலர் கூட அடிபணியாத இந்தச் சிற்றரசரால், இன்றுஉலகில் பாதிக்கு மேற்பட்டவர்களால் கடவுளாக வழிபடப்படுகின்ற ஒருமகனை எப்படி உருவாக்க முடிந்தது? இன்று லட்சக்கணக்கான மக்களால் வணங்கப்படுகின்ற ஏசுவுக்கும் சாதாரண தச்சரான அவரது தந்தை ஜோசப்பிற்கும் இடையேயுள்ள பெரும் வித்தியாசத்தை எப்படிவிளக்குவீர்கள்? பரம்பரைக் கோட்பாட்டை வைத்துக்கொண்டு இவற்றையெல்லாம் விளக்க முடியாது.

புத்தரும்ஏசுவும் இந்த உலகின்மீது பரப்பியமாபெரும் சுயேச்சை எங்கிருந்து வந்தது? இத்தகைய மொத்தஆற்றல் அவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தது? இந்த ஆற்றல் காலங்காலமாகஅங்குதான் இருந்திருக்க வேண்டும். அது சிறுகச்சிறுக வளர்ந்துபிரம்மாண்ட மான ஆற்றலாகி, ஒருபுத்தராக, ஓர் ஏசுவாக சமுதாயத்தின்மீதுபாய்கிறது; இன்றும் பாய்ந்து பரவிக்கொண்டிருக்கிறது. இவையெல்லாமே கர்மத்தால், செயலால்தான் நிச்சயிக்கப்படுகின்றன.

உழைக்காமல் யாரும் எதுவும் பெற முடியாது. இது மாறாத நியதி. அப்படியில்லைஎன்று சில நேரங்களில் நாம்நினைக்கிறோம். ஆனால் காலப்போக்கில் இதைப்புரிந்து கொள்கிறோம். பணக்காரன் ஆவதற்காக ஒரு மனிதன் வாழ்நாள்முழுவதும் பாடுபடலாம். ஆயிரக் கணக்கானோரை ஏமாற்றலாம். ஆனால் கடைசியில், பணக்காரன் ஆவதற்கான தகுதி தனக்கு இல்லைஎன்பதை அவன் காண்கிறான். வாழ்க்கையேஅவனுக்குத் துன்பமாகவும் தொந்தரவாகவும் போய்விடுகிறது. இன்பத்திற்காக நாம் பொருட்களைச் சேர்த்துக்கொண்டே போகலாம். ஆனாலும் நாமே உழைத்துச்சம்பாதித்தவை மட்டுமே உண்மையில் நமக்குச் சொந்தமானவை. ஒரு முட்டாள், உலகத்தில் உள்ள எல்லா நூல்களையும்வாங்கித் தனது நூல் நிலையத்தில்அடுக்கி வைக்கலாம். ஆனால் அவற்றுள் அவனதுதகுதிக்கு ஏற்றவைகளை மட்டுமே அவனால் படிக்கமுடியும். இந்தத் தகுதியைச் செயல்தான்உருவாக்குகிறது.